**சார்பு நீதிமன்றம், மன்னார்குடி**

**அசல் வழக்கு எண்.160/2020**

2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 05 ஆம் நாள் செவ்வாய்கிழமை

வா.சா.3 இந்திய சாட்சி சட்டத்தின் கீழ் திரு.எஸ்.முத்துராமன்,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிடப்பட்டு உறுதி கூறப்படுகிறது. சாட்சியிடம் சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | லெட்சுமணன் | த/பெ.: | மாணிக்கம் |
| கிராமம்: | சேந்தமங்கலம் | தாலுக்கா: | மன்னார்குடி |
| மதம்: | இந்து | தொழில்: | |
| வயது: | 65 | முகவரி: | எண் 3/244 சேந்தமங்கலம் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of – 1873 on day of 05.08.2025

**முதல் விசாரணை :-**

நான் வழக்கில் வாதி தரப்பு 3 வது சாட்சி ஆவேன். எனது தரப்பு சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள விவரங்கள் நான் சொன்னதுதான். அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். என் தரப்பு சான்று ஆவணமாக எதுவும் தாக்கல் செய்யவில்லை.

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் தாக்கல் செய்துள்ள நிரூபணபிரமாணபத்திரத்தில் சொல்லியுள்ள RCC வீடு கட்டியுள்ளது தொடர்பாக யார் பணம் கொடுத்தது யார் பொருட்கள் வாங்கியது என்று எனக்கு தெரியும். அதை என்னுடைய பிரமாணபத்திரத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். காவல்துறையினர் என்னை எப்போது எந்த தேதியில் விசாரித்தார்கள் என்று பிரமாணபத்திரத்தில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். 3ம் பிரதிவாதி அனுப்பியுள்ள வழக்கறிஞர் அறிவிப்பு பற்றி எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது. சமரசம் எப்போது பேசப்பட்டது எங்கு வைத்து பேசப்பட்டது என்று பிரமாணபத்திரத்தில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். நான் வழக்கு சொத்தின் அருகில் குடியிருந்து வருவதற்காக ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனக்கு வாதி பிரதிவாதியின் குடும்பவிபரங்கள் எதுவும் தெரியாது என்றும் 1ம் வாதி கேட்டுக்கொண்டதற்கிணங்க நடைபெறாத சம்பவங்களை நடைபெற்றதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

MUTHURAMAN

Digitally signed by MUTHURAMAN
DN: cn=MUTHURAMAN, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2025.08.14 17:44:37 +0530

சார்பு நீதிபதி,

மன்னார்குடி